**செ.கு.எண்: 107** **நாள்: 14.12.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (14.12.2021) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் நடைபெற்ற அரசு விழாவில் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் நடத்திய கலந்துரையாடல்**

**திருமதி ஸ்டெல்லா, மாவட்ட கவுன்சிலர் சிவகங்கை மாவட்டம்,**

**மாண்புமிகு முதலமைச்சர்:** உங்கள் சுய உதவிக் குழு சார்பாக என்னென்ன பொதுப்பணி செய்துகொண்டிருக்கிறீர்கள்?

**ஸ்டெல்லா:** மகளிர் குழுவின் சார்பாக நிறைய செயல்பாடுகள் செய்திருக்கிறோம். கொரோனா காலங்களில் உதவிகள் அதிகமாக செய்திருக்கிறோம், அரிசி, பருப்பு போன்றவை கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** நீங்கள் மாவட்ட கவுன்சிலராக வந்திருக்கிறீர்கள், அதனால் அரசியல் ரீதியாக பணியாற்றக்கூடிய சூழ்நிலை உங்களுக்கு இருக்கிறது. அதையும் பார்த்துக்கொண்டு சுய உதவிக் குழுவையும் எப்படி சமாளிக்கிறீர்கள்?

**ஸ்டெல்லா:** அரசியல் நேரத்தில் அந்தக் கடமையை செய்வேன். மற்ற இடைப்பட்ட நேரங்களில், மாலை நேரங்களில் சுய உதவிக் குழுக்களோடு சேர்ந்து அனைத்து செயல்பாடுகளையும் செய்து முடித்துவிடுவேன்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

**ஸ்டெல்லா:** கொரோனா காலங்களில் மக்கள் வங்கிக் கடன் கட்டமுடியாமல் இருந்த சூழ்நிலையில் நீங்கள், வங்கிக் கடனை தள்ளுபடி செய்த அந்தத் தருணம் எங்களுக்கு பெருமகிழ்ச்சியைத் தந்தது. சமீப காலத்தில் நீங்கள் வீடியோ ஒன்று வெளியிட்டீர்கள். அந்த வீடியோவில், பெண்கள் பாலியல் வன்கொடுமையில் அந்த அழுகிற சத்தம் என் மனதில் மிகவும் வேதனையைக் கொடுக்கிறது என்று சொன்ன அந்த வார்த்தைகளும், நான் பெண்களுக்கு நல்ல தந்தையாக இருப்பேன் என்று சொன்ன அந்த வார்த்தையும் எங்கள் மகளிர் குழு அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, அது எங்களுக்கு நல்ல நம்பிக்கையைத் தந்தது.

**மாண்புமிகு முதலமைச்சர்:** நீங்கள் சிறப்பாக, தைரியமாக பேசினீர்கள். அதனால், இங்கிருக்கக்கூடிய மக்கள், அவர்களை ஊக்கப்படுத்துவதுபோல் கரவொலி எழுப்பி வாழ்த்து சொல்லுங்கள்.

**திருமதி. ஆஷா, நீலகிரி மாவட்டம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு வணக்கம், என்னுடைய பெயர் ஆஷாசன், நான் நீலகிரி மாவட்டத்திலிருந்து பேசுகிறேன். நான் தோடா பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த பெண். நாங்கள் சுமார் 65 மந்துகளில் வசித்துக்கொண்டு வருகிறோம். நாங்கள் 10 குடும்பங்கள் ஒன்றாக சேர்ந்து குடியிருக்கிற இடத்துக்குத்தான் மந்து என்று செல்வோம். இதில் சுமார் 28 குழுக்கள் அமைத்து நடத்திக்கொண்டு வருகிறோம். நாங்கள் இரண்டாவது தலைமுறையாக 12 பேர் ஒன்றாக சேர்ந்து தோடா ஜியோன் தென்றல் என்ற குழுவை கடந்த 5 வருடங்களாக நடத்திக் கொண்டு வருகிறோம். எங்களுடைய பாரம்பரிய தொழிலான தோடா எம்பிராய்டரிங் செய்துகொண்டு வருகிறோம். அதில் நாங்கள் பர்ஸ், பவுச், குஷன் கவர், செல் ஃபோன் கவர், மாஸ்க், ஹேண்ட் பேக், துப்பட்டா ஆகிய பல்வேறு பொருட்களை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். முன்னர், நாங்கள் மந்துக்களில் இருந்தே எங்கள் தொழிலை செய்து கொண்டிருந்தோம். அதனால் எங்களுக்கு விற்பனைக்கு வழி வாய்ப்பு இல்லாமல் இருந்தது. மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்ந்த பிறகு நாடு முழுவதும் நடக்கின்ற பொருள் கண்காட்சிக்கும் சென்று எங்கள் பொருட்களை விற்பனை செய்து வருகிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** பழங்குடியின மக்களுக்கு என்ன நீங்கள் சுய உதவிக் குழு சார்பாக என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?

**ஆஷா** : நாங்கள் சுகாதாரத் துறையுடன் இணைந்து எல்லா மந்துகளுக்கும் சென்று, இந்த கொரோனா காலத்தில் எல்லோரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வு கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** சுற்றாலாவுக்கு என்று ஒரு சில குறிப்பிட்ட மாதங்கள் இருக்கும். அந்த நேரத்திலே தான் சுற்றுலா பயணிகள் வருவார்கள். அப்படிப்பட்ட சூழல் இல்லாத மீதியிருக்கக்கூடிய மாதத்தில் நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள்? எப்படி பொருட்களை கொண்டு போய் விற்கிறீர்கள்?

**ஆஷா** : நாங்கள் தயாரிக்கும் பொருட்கள் கைவேலை நிறைந்ததாக இருப்பதால் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அதிக நாட்கள் ஆகும். எனவே, சுற்றுலா சூழல் இல்லாத காலக்கட்டத்தில் நாங்கள் அனைவரும் இணைந்து துணி வாங்கி உற்பத்தியை அதிகப்படுத்தி பொருட்களை கையிருப்பில் வைத்துக்கொள்வோம். அதைத் தவிர, எங்கள் மலை மாவட்டத்தில் கிடைக்கிற தேன், தைலம், டீத்தூள் போன்றவற்றையும் நாங்கள் விற்பனை செய்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல் எம்பிராய்டிங் முடித்ததற்கு பிறகு டெய்லரிடம் கொடுத்துத்தான் நாங்கள் அதை தைத்து முடிக்க வேண்டும். நாங்கள் டெய்லரிங் படித்ததினால், அதையெல்லாம் நாங்களே செய்து கொண்டிருக்கிறோம். அது எங்களுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர்**: நன்றி அம்மா. அந்த சகோதரிகளுக்கெல்லாம் நீங்கள் கரவொலி எழுப்பி வாழ்த்துகளைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர்**: திருநங்கை வசந்தி, தர்மபுரி, சிறப்புப் பிரிவினர்

**திருநங்கை வசந்தி** : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம் அய்யா, அதியமான் கோட்டை, தர்மபுரி மாவட்டத்திலிருந்து பேசுகிறேன். நான் பி.பி.எம். படித்துவிட்டு வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் நான் திருநங்கையாக மாறி தர்மபுரி மாவட்டத்தில் நான் வசித்து வந்தேன். அந்த நேரத்தில் மக்கள் என்னை ஒன்பது, அரவாணி என்று கேலியாக பேசினார்கள். அந்த நேரத்தில், கலைஞர் அய்யா அவர்கள், எங்களுக்கு திருநங்கை என்று பெயர் சூட்டி, எங்களை கவுரப்படுத்தி பெருமைப்படுத்தினார்கள். அந்த சமயத்தில் நாங்கள் மிகவும் சந்தோஷப்பட்டோம். அய்யா ஆட்சியில் எங்களையும் திருநங்கை என்று பெயர் சூட்டி, இந்த சமுதாயத்தில் எங்களையும் பெருமைப்படுத்தியதற்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களுக்கு வீடு இல்லாத நிலையில் அப்போது இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.அமுதா அவர்கள் 25 வீடு கட்டிக் கொடுத்து எங்களுக்கெல்லாம் பட்டா கொடுத்தார்கள். இப்போது நாங்கள் அந்த வீட்டில் கௌரவமாக வாழ்ந்து வருகிறோம். இத்தனை காலமாக எங்களுடைய வாழ்வாரத்திற்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தபொழுது வீட்டிலேயே இருந்தோம், கடை, கடையாகச் சென்று கடன் கேட்போம். அப்போது

நாங்கள் மகளிர் சுய உதவிக் குழுவிடம் ஒரு உதவி கேட்டோம். எங்களையும் உங்கள் குழுவில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டபோது, மகளிர் திட்டம் மூலம் எங்களையும் சேர்க்கச் சொன்னோம். சிவசக்தி திருநங்கைக் குழுவாக ஆரம்பித்து நாங்கள் இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் எல்லா ஊர்களிலும் திருநங்கையும் ஒரு குழுவில் இருப்பதற்கு மிகவும் பெருமைப்படுகிறோம். இப்போது தற்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் எங்களுக்கு ரூ.6 இலட்சம் கடனுதவி வழங்கினார்கள். அந்த கடனை வைத்து சிறு தொழில் ஆரம்பித்து கௌரவமாக பிழைத்துக் கொண்டிருக்கிறோம். உங்களுடைய புண்ணியத்தில் நாங்கள் இன்னும் பெருவாழ்வு வாழவேண்டும். இப்பொழுது சிறு தொழிலாக பால் வியாபாரம், துணி வியாபாரம் போன்றவை செய்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** நீங்கள் பெரியளவில் போராடி, வெற்றி மங்கையாக திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உள்ளபடியே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களை மாதிரி சகோதரிகளுக்கு எது போன்ற உதவிகளை செய்து கொண்டிருக்கிறீர்கள்?

**திருநங்கை வசந்தி** : திருநங்கைகள் எங்களையும் மதித்து எல்லா இடத்திற்கும் அழைக்கிறார்கள். அது மாதிரி நாங்கள் விழிப்புணர்ச்சி செய்து கொண்டு வருகிறோம். கொரோனா காலத்தில், வீடு வீடாகச் சென்று பெண்கள் செய்வது போல நீங்களும் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள் என்று மகளிர் சுயஉதவிக் குழுவின் மூலமாக எங்களுக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். அப்பொழுது நாங்கள் எல்லாம் வீடு வீடாகச் சென்று கொரோனா தடுப்பூசி மற்றும் எச்.ஐ.வி டெஸ்ட் ஆகியவை எடுப்பதற்கு எங்களையும் மதித்து கூப்பிடுகிறார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** நன்றி அம்மா. உங்களுடைய அனுபவத்தில் திருநங்கைகளுடைய நல்வாழ்விற்கு புதிதாக இந்த அரசுக்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்களா?

**திருநங்கை வசந்தி** : ஆமாங்கய்யா. இப்பொழுது, படித்த திருநங்கைகள் அதிகம் இருக்கிறார்கள். மகளிருக்கு பஸ் வசதி செய்து கொடுத்தது போல திருநங்கைகளுக்கும் செய்து கொடுத்திருக்கிறீர்கள். அதுபோல மகளிர் திட்டத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இருப்பது போல திருநங்கைகளுக்கும் வேலைவாய்ப்பு கொடுத்தீர்கள் என்றால் மிகவும் நன்றாக இருக்கும். நாங்களும்

வாழ்க்கையில் முன்னேறுவோம். இப்பொழுது உள்ள திருநங்கைகளுக்கும் அடுத்து வருகிற திருநங்கைகளுக்கும் நாங்கள் வழிகாட்டியாக இருப்போம் என்று நாங்கள் நினைக்கிறோம். இதுவரை நீங்கள் செய்து கொடுத்த வாய்ப்புக்கு நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** சகோதரிகளுக்கெல்லாம் நீங்களெல்லாம் கரவொலி எழுப்பி வாழ்த்துகளைச் சொல்லுங்கள்.

<u>**திருமதி எஸ். காந்திமதி, திருவண்ணாமலை மாவட்டம்**</u>

**திருமதி காந்திமதி** : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், கெங்கம்பட்டு ஊராட்சி, துளசி மகளிர் குழுவில் உறுப்பினர்களாக உள்ளேன். அனைத்து மகளிர் சார்பாகவும், மகளிர் குழுக்கள் சார்பாகவும் மறைந்தும் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** 18 வருடத்திற்கும் மேல் உங்களுக்கு மகளிர் சுய உதவிக்குழுவில் அனுபவம் இருக்கிறது. அதில், நீங்கள் மகிழ்ச்சியடைந்த, சிறப்பான அனுபவத்தை சொல்ல முடியுமா?

**திருமதி காந்திமதி** : சந்தோஷமான நிகழ்ச்சி என்று பார்த்தால், பல இலட்சம் குழுக்கள் இருந்தும் இன்றைக்கு நாங்கள் முதலமைச்சரை சந்தித்துப் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு அளவில்லா சந்தோஷப்படுகிறோம். அது தான் எங்களுகடைய முதல் வெற்றி, முதல் சந்தோஷம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** உங்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் எந்த அளவுக்கு துணையாக இருக்கிறார்கள்? எந்த அளவுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் ? அந்த அனுபவத்தை சொல்லுங்கள்.

**திருமதி காந்திமதி** : சுய உதவிக்குழுக்கள் ஏற்கனவே வெளியில் வராத மக்களை இன்றைக்கு வெளியில் வந்து சுய உதவிக் குழுக்களுக்கு நம்முடைய மாண்புமிகு

தமிழ்நாடு அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும் நிறைய கடன்களை பழைய ஆட்சியிலே 10 வருடத்திற்கு முன்னாள் சுழல் நிதிக் கடன்களும், பொருளாதாரக் கடன்களும் அதிகமாக வாங்கினோம். அதன் மூலமாக நிறைய தொழில்களை செய்து இன்றைக்கு முன்னேற்றமான நிலைக்கு வந்து ஒவ்வொரு குடும்பமும் ரூ.10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை சம்பாதிக்கும் அளவுக்கு தன்னுடைய குடும்பத்தை தானாகவே நிர்வகிக்கும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றால், இதற்கு முக்கியமான காரணம் தமிழ்நாடு அரசும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுமே காரணம் என்று கூறிக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாமல், எங்களுடைய மகளிர் குழுக்களுக்கு நிறைய கடனுதவியை செய்துள்ளார்கள். தற்சமயம், குழுக்களுக்கு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்து, கொரோனா காலத்தில் அனைத்து மகளிருடைய வறுமையையும் நீக்கியுள்ளார்கள் என்பதை பெருமையோடு கூறிக்கொள்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** நீங்கள் சுற்றுச்சூழல் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு போராளியாக உள்ளீர்கள். கிராம மக்களிடம் நெகிழி குறித்த பிரச்சாரம் எப்படி இருக்கிறது?

**திருமதி காந்திமதி** : ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை முழுமையாக ஒழிக்க வேண்டும். பிளாஸ்ட்டிக்கை பயன்படுத்த, பயன்படுத்த நிலத்தடி நீர் மட்டம் குறைந்து போகிறது. எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாத ஒரு நிலைமைக்கு போகப் போகிறோம். பிளாஸ்டிக்கை பயன்படுத்தி அப்படியே வெளியிலே தூக்கி எறியும்பொழுது கால்நடைகள் அதை சாப்பிட்டு அதனால் உயிரிழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. பிளாஸ்டிக்கை பயன்படுத்தக் கூடாது என்பதை கூட்டங்கள் மூலமாகவும், வீடு வீடாகச் சென்று, பிளாஸ்டிற்கு பதிலாக மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதைப் பற்றியும் எடுத்துக் கூறி விழிப்புணர்வு செய்து, மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** 18 வருடமாக சுய உதவிக்குழுவை கட்டிக் காத்து வந்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு செய்து மிகச் சிறப்பாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார். அதற்காக நாம் அவரை பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

<u>**திருமதி.நசிமா, மாமல்லபுரம்**</u>

**திருமதி.நசிமா:** மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு வணக்கம். மாமல்லபுரம், பூஞ்சை கிராமத்திலிருந்து பேசுகிறேன். 2008ல் தான் முதன்முதலாக குழுவாக அமைத்தோம். ஆனால் 2013ல் எனக்கு தையல் தெரியும் என்பதால் ஐந்து பேரை வைத்து சிறிய தையல் கடையை ஆரம்பித்து, 2018ல் மகளிர் திட்டம் மூலமாக எங்களுக்கு இந்த கடை கிடைத்தது. இந்த கடை கிடைத்த பிறகு எங்களுடைய வாழ்வாதாரம், தனி நபர் வருமானம் எங்களுக்கென்று சமுதாயத்தில் மரியாதை அனைத்தும் கணிசமான அளவுக்கு மற்றவர்கள் மெச்சும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இத்தனை வருடம் கடந்து 2021க்கு வந்துவிட்டது. நாங்கள் டிஜிட்டல் மார்க்கெட்டிங் செய்யும் அளவிற்கு வந்திருக்கிறோம். எங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு brand name ஏற்படுத்தி வெளிநாடுகளுக்கு பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்ந்திருக்கிறோம். கொரோனா காலத்தில்கூட நாங்களே ஆர்டர் எடுத்து, இங்கேயே இருந்து வேலை செய்து எங்களுடைய குடும்பங்களை நாங்களே காப்பாற்றும் அளவுக்கு சம்பாதித்தோம். அதுமட்டுமல்லாமல், எங்கள் பகுதியில் உள்ள ஏழை எளிய குடும்பங்களுக்கு எங்களால் முடிந்த அரிசி, பருப்பு மளிகை சாமான்கள் கிட்டத்தட்ட ஆறுமாத காலம் கொடுத்து, எங்களால் முடிந்த அளவுக்கு ஒத்துழைப்பை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** ஏழைகளுக்கு இலவசமாக தையல் பயிற்சி கொடுப்பதை உங்கள் கடமையாக செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் தொழில் முயற்சிக்கு உங்கள் குடும்பத்தில் இருக்கிறவர்கள் உங்களுக்கு ஆதரவு கொடுக்கிறார்களா? எப்படி ஆதரவு கொடுக்கிறார்கள்?

**திருமதி.நசிமா:** சில நேரங்களில் நாங்கள் வீட்டுக்கு தாமதமாக போக வேண்டியிருக்கும். குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும்போது சமைப்பதைத் தவிர்க்கவேண்டி இருக்கும். இதையெல்லாம் எங்கள் வீட்டில் உள்ளவர்களும், குழந்தைகளும் ஒத்துழைப்பு தருகிறார்கள். இந்த ஒத்துழைப்பு தான் பெண்களுக்கு மிகவும் முக்கியம். அவர்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்கு நிச்சயமாக இருக்கிறது.

**மாண்புமிகு முதலமைச்சர்:** இணையவழி சந்தையை எப்படி கிராமங்களில் பிரபலப்படுத்தினீர்கள்? அந்த அனுபவத்தை சொல்லுங்கள்.

**திருமதி.நசிமா:** பெண்களுக்காக பெண்களால் நடத்தப்படும் பயிலகம் என்று தையல் பள்ளியை ஆரம்பித்தோம். நாங்கள் தைத்துக் கொடுப்பது மட்டுமல்லாமல், சுற்றுவட்டார கிராமங்களில் வாழ்வாதாரம் இல்லாத பெண்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு இலவசமாக தையல் பயிற்சி கொடுத்தோம். நாளடைவில் அவர்களுக்கு தொழில்முறை பயிற்சி கொடுத்து எங்கள் கடையிலேயே அவர்களுக்கு ஒரு வேலைவாய்ப்பு கொடுத்து, மகாபலிபுரத்தில் பெண்கள் நாங்கள் ஒரு குழுவாக இவ்வளவு பெரியதாக உருவாகியிருப்பதால் தானாகவே நாங்கள் பிரபலமாக இருக்கிறோம். ஏனென்றால், எங்களுடைய பயிலகம் தான் பெண்களுக்காக நடத்தப்படும் பயிலகம், மகளிர் குழுவாக மகளிர் குழுவால் வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு முதலமைச்சர்:** திருமதி நசீமா அப்பகுதி மக்களுக்கு இலவசமாக தையல் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இணையவழி சந்தையை கிராமங்களுக்குப் எடுத்து சென்றிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு Special ஆக ஒரு கரவொலி எழுப்பி வாழ்த்து சொல்லுங்கள்.

நன்றி.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**